DINAMANI

17 AUG 2021

PAGE 2

# புதுவை பல்கலை.யில் சுதந்திர தின விழா

**புதுச்சேரி, ஆக. 16:** புதுவைப் பல்கலைக்கழகத்தில் சுதந்திர தின விழாஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. விழாவில் துணைவேந்தர் குர்மீத் சிங் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தினார்.

இதைத் தொடர்ந்து, பல்கலை. தோட்டக்கலைத் துறை சார்பில், உருவாக்கப்பட்ட தூய்மைக் காற்றுப் பூங்காவை துணைவேந்தர் திறந்துவைத்தார். பல்கலை. வளாகம் முழுவதும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

விழாவில் காவல் துறைக் கண்காணிப்பாளர் மாறன் தலைமையில், அணிவகுப்பு மரியாதை நடைபெற்றது. பல்கலை. இயக்குநர் பாலகிருஷ்ணன், பதிவாளர் சித்ரா, நிதி அதிகாரி அமரேஷ் சமந்தரய்யா, புல முதன்மையர்கள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், அதிகாரிகள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

**காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு மையத்தில்:** புதுச்சேரி காஞ்சி மாமுனிவர் அரசு பட்ட மேற்படிப்பு-ஆராய்ச்சி மையத்தில் நடைபெற்ற விழாவில், நிறுவனர் இயக்குநர் மு.செல்வராஜ் தேசியக் கொடியேற்றி, நிறுவனத்தின் பணிகள், திட்டங்களை எடுத்துரைத்தார். பேராசிரியர் கு.சிவமணி, தனது விடுதலைப் போராட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. நிகழ்ச்சி ஏற்பாட்டை நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் மு.இளங்கோவன் மற்றும் தன்னார்வலர்கள் செய்திருந்தனர்.